# ශ්‍රී ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,875/4 — 1969 ඔක්තෝබර් 14 වැනි අඟහරුවාද — 1969.10.14

14,875/4 ம் இலக்கம் — 1969 ஆம் ஆண்டு ஒற்ரேபர் மாதம் 14 ந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக்கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல. சி. 474 — நீப உணவுப்பொருட்கள்—கடலை, பயறு வகை

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

#### கட்டளை

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினுலும் அதே சட்டத்தின் 3 (2) ம் பிரிவினுலும் எனக்களிக்கப்பட்டுள்ள தத்து வங்களைக் கொண்டு இலங்கைத் தீவின் (உணவு) பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி தெவுந்தரா வியனகே சந்திரசேகரா ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1969 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ந் தேதி வெளியான 14,872/2 இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 1969 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ந் தேதியைக் கொண்ட சி. 473 ம் இலக்கக் கட்டளையை உடனடியாக எடுத்துவிடுகிறேன்.

(2) இதனுேடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே இறக்குமதியாளர் ஒருவர் மொத்த அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய இறக்குமதி விலையாகவும், மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்கள் இந்த விலைக்குக் கூடுதலாக கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் விற்கலாகாதெனவும், உடனடியாக நடைமுறையில் வருமாறும் விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்காக, அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில், அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது, வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறு தொகையையும், இக்கட்டளையால், அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள், ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும், வாங்குபவரால் நன்ருகப் பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்ட. . மின் நோக்கத்திற்காக, " இருத்தல் " அல்லது " இரு " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்குப் பின் வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைகளுக்குக் கொடுத்த விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா ?

(8) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து, அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின், அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1969 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14 ந் திகதியன்று முற்பகல் 11 மணிக்குக் கொழும்பில் கையொப்பமிடப்பட்டது.

தெ. லி. சந்திரசேகரா,
பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

அட்டவணை

| பத்தி 1<br>விபரம் | பத்தி 2<br>இறக்குமதியாளரின் அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய இறக்குமதி விலை<br>ரூ. ச | பத்தி 3<br>மொத்த வியாபாரி ஒருவர் அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | பத்தி 4<br>சில்லறை வியாபாரி ஒருவர் இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| சிந்தாமணிக்கடலை .. .. | 46 0 .. | 47 75 .. | 0 50 |
| கடலைப் பருப்பு .. .. | 58 0 .. | 59 75 .. | 0 61 |
| பாசிப்பயறு .. .. | 54 50 .. | 56 25 .. | 0 58 |
| உளுத்தம் பருப்பு .. .. | 67 50 .. | 69 25 .. | 0 70 |
| முழு உழுந்து .. .. | 52 75 .. | 54 50 .. | 0 56 |
| துவரம் பருப்பு .. .. | 66 0 .. | 67 75 .. | 0 68 |
| கொண்டைக்கடலை .. .. | 46 0 .. | 47 75 .. | 0 50 |

குறிப்பு.—(1) இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

(2) இறக்குமதியாளரின் விலையென்பது 10 அந்தரும் அதற்கு மேற்பட்ட எடையையுடைய ஒரு விற்பனையைக் குறிப்பதாகும்.

10–839

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.